நகர்மன்றம்,
போடிநாயக்கனூர், நாள்.27.08.2020

2020ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27.08.2020ம் தேதி வியாழக்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெற்ற அவசர கூட்ட நடவடிக்கைகள்

முன்னிலை :- திரு.வீ.குணசேகர்.B.E,
ஆணையாளர் (பொ) மற்றும் தனிஅலுவலர்

**1)** போடிநாயக்கனூர் நகராட்சி தோற்றுவிக்கப்பட்டு நூறாண்டுகள் நிறைவடைந்ததை யொட்டி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 19.03.2020 அன்று தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதி எண்.110 ன்கீழ் போடிநாயக்கனூர் நகராட்சிக்கு உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் மேற்கொள்ள ரூ.50.00 கோடி சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்து அறிவித்துள்ளார்கள். அதனடிப்படையில் பார்வை–1 ல் காணும் அரசாணையின் படி போடிநாயக்கனூர் நகராட்சியில் பணிகளை மேற்கொள்ள ரூ.50.00/– கோடி வழங்குவதற்கு கொள்கை அளவில் அனுமதி வழங்கியும் பணிகள் தேர்வு செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் தலைமையில் குழு அமைத்தும் அரசாணை (நிலை) எண்.59 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.01.06.2020 அன்று பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன்பேரில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் தலைமையில் 25.06.2020 அன்று காணொலி காட்சி மூலம் நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை மற்றும் ஆணையாளர், போடிநாயக்கனூர் நகராட்சி ஆகியோர் கலந்து கொண்டனர். மேற்படி கூட்ட நடவடிக்கையின் கருத்துரு போடிநாயக்கனூர் நகராட்சி நூற்றாண்டு விழா தொடர்பாக தேர்வு செய்யப்பட்ட பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கிடக்கோரி பிரேரணை சமர்ப்பிக்க கோரப்பட்டது.

மேற்படி குழு ஒப்புதல் வழங்கிய பணிகளுக்கு நிர்வாக அனுமதி கோரி திட்டப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டதில் பார்வை 5ல் கண்டுள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதத்தில் மாண்புமிகு உச்ச நீதிமன்றம் பொது இடங்களில் நூற்றாண்டு நினைவு வளைவு, நினைவு ஸ்தூபி ஆகியவற்றை அமைப்பதற்கு தடை செய்யப்பட்டுள்ளதால் தேர்ந்தெடுக்கப்பட்ட 12 பணிகளில் வரிசை எண் I மற்றும் II-ல் மூன்று இடங்களில் நூற்றாண்டு நினைவு வளைவு, போஜன் பூங்கா அருகில் நினைவுத் தூண் மற்றும் பேருந்து நிலையத்தில் அலங்கார வளைவு அமைப்பது குறித்து குறிப்பு அனுப்புமாறு கோரப்பட்டுள்ளது. எனவே கீழ்க்கண்ட பணிகள் தேர்வு செய்யப்பட்டு நிர்வாக அனுமதி கோரி பணிவுடன் சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>ஏற்கனவே தேர்வு செய்யப்பட்ட பணிகள்</u>

| **வ.எண்.** | **பணியின் விபரம்** | **மதிப்பீடு (ரூ.கோடியில்)** |
|---|---|---|
| **I** | **நூற்றாண்டு நினைவு வளைவு அமைத்தல்** | |
| 1 | நகர நுழைவு வாயில்களில் மூன்று இடங்களில் நூற்றாண்டு நினைவு வளைவு அமைத்தல் மற்றும் போஜன் பூங்கா அருகில் நினைவுத் தூண் அமைத்தல் | **1.00** |
| **II** | **பேருந்து நிலையம்** | |
| 1 | பேருந்து நிலையத்தில் ஓடுதளம் அமைத்தல் கடைகள் கட்டுதல் அலங்கார வளைவு அமைத்தல் மற்றும் அபிவிருத்தி பணிகள் செய்தல் | **3.00** |

<u>தற்பொழுது தேர்வு செய்யப்பட்ட மாற்றுப் பணிகள்</u>

| **வ.எண்.** | **பணியின் விபரம்** | **மதிப்பீடு (ரூ.கோடியில்)** |
|---|---|---|
| 1 | போடிநாயக்கனூர் நகராட்சியில் மூன்று இடங்களில் பொது சுகாதார பிரிவு அலுவலகம் கட்டுதல் | **0.70** |
| 2 | வ.உ.சி நகர் நடுபட்டி விஸ்தரிப்பு பகுதியில் உள்ள பூங்கா மேம்படுத்துதல் | **0.30** |
| 3 | பேருந்து நிலையத்தில் ஓடுதளம் அமைத்தல், கடைகள் கட்டுதல், வாகனம் நிறுத்துமிடம் அமைத்தல் மற்றும் அபிவிருத்தி பணிகள் செய்தல் | **3.00** |

**(ந.க.எண்.885/2020/இ1)**

**தீர்மான எண் : 189** அனுமதிக்கப்பட்டது

2)போடிநாயக்கனூர் நகராட்சிக்கு சொந்தமான வாகன எண்.TN60Y6345ல் உள்ள கீழ்கண்டவாறு பழுது பணிகள் செய்வதற்கான விபரம்

1 இன்ஜின் ஆயில் புதிதாக மாற்றுதல். (டீசல் பில்டர், ஆயில் பில்டர் மாற்றுதல்)
2 4 வீல்களுக்கு கிரிஸ் பேக்கிஸ் செய்தல்
3 இன்னர், அவுட்டர் பேரிஸ் செக்கப் செய்தல்
4 வீல் அலைமன்ட் சரிபார்த்தல்.
5 கியர் பாக்ஸ், கிரௌன் ஆயில் புதிதாக மாற்றுதல்
6 ஸ்டேரிங் சரிபார்த்தல்

மேற்கண்ட பணிகள் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.30,000/–ஐ இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும், மேற்படி வாகனத்தின் முக்கியத்துவம் கருதி 29.07.2020ம் தேதி விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | பாண்டியன் ஆட்டோமொபைல்ஸ், பெரியகுளம் | : | ரூ.32,450/– |
| 2. | Ozone Care,Theni | : | ரூ.27,900/– |

**அலுவலகக்குறிப்பு :** வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவாக விலைப்புள்ளி வழங்கிய Ozone Car Care, Theni விலைப்புள்ளியினை ஏற்று விநியோகம் செய்யவும், பட்டியல் தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1796/2020/இ1)**

**தீர்மான எண் : 190** குறைந்த விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கப்பட்டது

தனி அலுவலர் (ம) ஆணையாளர்
போடிநாயக்கனூர்